# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

**சென்னை**

நாள் : 05.07.2022

பெறுநர்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 600002.

ஐயா, வணக்கம்.

பொருள்: மின்வாரிய பணியாளர்களின் தேங்கியுள்ள கோரிக்கைகள் மீது – தீர்வு எட்டப்படாததால் – தங்களின் கவனத்தை ஈர்க்க– இயக்கம் – தொடர்பாக.

பார்வை: தொழிற் சங்க கூட்டு நடவடிக்கைக்குழு கடித நாள் 16.06.2022

மின்வாரிய பணியாளர்களின் கீழ்கண்ட கோரிக்கைகள் மீது தீர்வு காண வலியுறுத்தி பலமுறை தங்களிடமும் நேரில் பேசியும், கடிதம் கொடுத்தும் தீர்வு காணப்படவில்லை. கீழ்கண்ட கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளோம்.

1. மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்கிட வேண்டும்.
2. மின்வாரிய ஆணை 2, நாள் 12.04.2022 –ஐ முழுமையாக ரத்து செய்திட வேண்டும்.
3. மின் வாரியத்தில் உள்ள 56,000 காலிப் பணி இடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
4. அரசு ஆணை 100–ன் தொடர்பாக தமிழக அரசின் உத்திரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.
5. மின்வாரியத்திற்கு சொந்தமான வட சென்னை அனல் மின் நிலையம் அலகு–3ன் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை முழுவதுமாக அயல்பணி ஒப்படைப்பு முறையை (end to end Out sourcing) கைவிட வேண்டும்.
6. துணைமின் நிலையங்களில் அயல்பணி ஒப்படைப்பு முறையை (Out sourcing) கையாள உத்திரவிட்டிருக்கும் அனைத்து வாரிய ஆணைகளையும் திரும்பப் பெற்று உரிய பதவி அனுமதிகளை வழங்கிட வேண்டும்.

7. Re-Deployment முறையை கைவிட்டு பதவி உயர்வின் மூலம் பணி இடங்களை நிரப்பிட வேண்டும்.

8. மின்வாரியத்திற்கு சொந்தமான பலகோடி ரூபாய் மதிப்புள்ள தரவுகளை (IT Wing) தனியார் ஏஜன்சியிடம் ஒப்படைக்கக்கூடாது.

9. நிறுத்தி வைக்கப்பட்ட சரண்டர் விடுப்பையும் மற்றும் ஜனவரி 2022 முதல் வழங்க வேண்டிய பஞ்சப்படியையும் வழங்கிட வேண்டும்.

10. தரமான தளவாட பொருட்கள் தடையின்றி தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளின் மீது மின்வாரிய நிர்வாகம் மற்றும் தமிழக அரசின் கவனத்தை ஈர்த்து தீர்வு காண்கின்ற வகையில் எதிர் வரும் 20.07.2022 அன்று அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் மின்வாரிய தலைமையகத்திலும் காத்திருப்பு போராட்டம் நடத்துவதென மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு முடிவு செய்துள்ளதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

எனவே தொழில் அமைதியை நிலை நாட்ட தகுந்த தீர்வு காண்பீர்கள் என நம்புகிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள

7/7/2022

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

For ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் (HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

[illegible]

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்